1972 மார்ச் 18]

பாலமலை ஆதிவாசிகள்

* 555 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா, பாலமலை ஆதிவாசிகளின் கிராம அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக மேட்டூர் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து 1970-ஆம் ஆண்டில் ஆலோசனைகள் அரசிற்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப் பட்டிருக்கிறதா?

(உ) ஆம் எனில், அவைகளின் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த பாலமலைப்பகுதி என்பது கிட்டத்தட்ட 4 ஆயிரம் அடி உயரத்திலே இருக்கிற பகுதியாகும். அங்கே முழுக்க முழுக்க ஆதிவாசிகள்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே போய்வர போக்குவரத்துக்கு ரோடு கிடையாது, ஆஸ்பத்திரி வசதி கிடையாது, மின்சார வசதி கிடையாது. இது போன்ற விவரங்களைப் பற்றியெல்லாம் சப்-கலெக்டரும், நானும் அங்கு சென்று பார்த்து அதற்கான விவர அறிக்கைகளை அனுப்பியிருக்கிறோமே, அவைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டதா? எந்த எந்த விஷயங்கள்பற்றி முடிவு எடுக்கப்பட்டு இருக்கின்றன, எந்த எந்த விஷயங்கள்பற்றி முடிவு எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதைக் கூறமுடியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் கோரிக்கைகள் நலத்துறையிலே மாத்திரம் செய்யக்கூடியவை அல்ல. சில விஷயங்கள் விவசாய இலாகா செய்யவேண்டியவையாக இருக்கின்றன. சில கோரிக்கைகள் சுற்றுலா வாரியம் கவனிக்கக்கூடியவையாக இருக்கின்றன. சில மருத்துவ, குடும்ப நலத் துறையால் கவனிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் இனம் இனமாகப் பிரித்து அந்த அந்த இலாகாவுக்கு அனுப்பியிருக்கிறோம். எஞ்சிய காரியங்களை நலத்துறை மூலமாகச் செய்வதற்கு நலத் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.